<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 136/2008**

பெயர்:**மாதையன்** நாள்: 25.11.2025

பி.வா.சா.2 – வாதி தரப்பு குறுக்கு விசாரணை.

பி.வா.சா.2 – மாதையன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11:50</u>

இந்த வழக்கின் இரு தரப்பினர்களையும் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். யார் யார்மீது என்ன பரிகாரம்கோரி இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், பெருமாள் செங்கோட்டையன் மீது வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கோரி வழக்கைத் தாக்கல் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. எந்த சர்வே எண்ணிற்கு பரிகாரம் கோரியுள்ளார் என்றால், வட்டராம்பாளையம், காவேரிப்பட்டி கிராம சர்வே எண்.144 க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். சர்வே எண்.144 ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால், தெரியாது. பெருமாளின் தந்தை பெயர் ராமன் என்றால், சரிதான். ராமன் என்பவருக்கு பெருமாள், பழனியப்பன் மற்றும் ரங்கநாதன் ஆகியோர் மகன்கள் என்றால், சரிதான். சர்வே எண்.144 ராமனின் பரம்பரை சொத்து என்றால், சரிதான். பெருமாளுக்கு ரேவதி முதல் மனைவி ஆவார், பாக்கியம் இரண்டாவது மனைவி என்றால், சரிதான். முதல் மனைவி ரேவதிக்கு மகேஸ்வரி என்ற மகள் உள்ளார் என்றால், சரிதான். இரண்டாவது மனைவி பாக்கியத்திற்கு பவதாரணி என்ற மகள் உள்ளார் என்றால், சரிதான். முதல் மனைவி ரேவதி உயிருடன் இல்லை என்றால், சரிதான். மகேஸ்வரியின் தாயார் ரேவதி இறந்த பின்னிட்டு அவருடைய தாயார் வழி பாட்டி வீட்டில் இருந்தார் என்றால், பாட்டி வீட்டிலும் இருந்தார், பெருமாள் வீட்டிலும் இருந்தார். மகேஸ்வரி அவருடைய தாய் வழி பாட்டி வீட்டில்தான் வசித்து வந்தார் என்றால், சரியல்ல. மகேஸ்வரியின் தாய் வழி பாட்டிதான் அவருக்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்றால், சரிதான். மகேஸ்வரிக்கும் அவருடைய தந்தை பெருமாளுக்கும் நல்ல உறவு இல்லாத காரணத்தால் மகேஸ்வரி அவருடைய தந்தைமீது பாகப்பிரிவினை மற்றும் செங்கோட்டையனுக்கு செய்த கிரயம் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால், சரிதான். மகேஸ்வரிக்கு சேரக்கூடிய பங்கிற்கான தொகையை

கொடுத்ததால் அவர் தனது வழக்கைத் தொடர்ந்து நடத்தவில்லை வாபஸ் பெற்றுக்கொண்டார் என்றால், சரிதான். நான் கூறுவதுபோல் மகேஸ்வரி அவருடைய தந்தையுடன் நல்ல உறவில் இருந்திருந்தால் வழக்கை தாக்கல் செய்திருக்கமாட்டார் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 2-ம் மனைவி பாக்கியத்தின் மகள் பவதாரணியும் அவருடைய பாட்டி வீட்டில் வசித்து வருகிறார், சரியல்ல. பெருமாள் செங்கோட்டையனுக்கு எந்த தேதியில் கிரயம் ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால், தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரிக்கையில் கிரய தேதி குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், அதுப்பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண். 144 ன் உட்பிரிவு எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. பெருமாளிடம் இருந்து செங்கோட்டையனுக்கு நிலத்தை நான்தான் விலை பேசி வாங்கி கொடுத்தேன் என்றால், சரிதான். நான்தான் முன்னின்று நிலத்தை வாங்கி கொடுத்ததற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கை யார் யார்மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம்கூட தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கில் பவதாரணி தாக்கல் செய்துள்ளார் என்றும் அவருக்கு தாவா சொத்தில் பங்கு உள்ளது என்றால், சரியல்ல. 3-ம் பிரதிவாதி செங்கோட்டையன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. தாவாபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 12:10</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.11.25 12:19:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.